செ.வெ.எண்: 24 நாள்:10.12.2020

# கரூர் மாவட்டம்

கரூர் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தில் பதிவு செய்துள்ள பதிவுதாரர்கள், அவர்களது வேலைவாய்ப்பு பதிவினை மாவட்டம் விட்டு மாவட்டம் மாற்றுவதற்கான நடைமுறையினை எளிமைப்படுத்தும் விதமாக வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை இயக்குநர் அவர்களால் அரசுக்கு அனுப்பப்பட்ட கருத்துரு ஏற்றுக்கொள்ளப்பட்டு பின்வரும் ஆவணங்களுள் ஏதேனும் ஒரு ஆவணத்தை சமர்ப்பித்து மாற்றிக்கொள்ளலாம் என அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில், வேலைவாய்ப்பு பதிவினை மாவட்டம் விட்டு மாவட்டம் மாற்ற பதிவுதாரர்களால், சுய சான்றளிக்கப்பட்ட குடும்ப அடையாள அட்டை (அ) ஆதார் அட்டை (அ) வாக்காளர் அட்டை (அ) கடவுச்சீட்டு (அ) ஓட்டுநர் உரிமம் ஆகியவற்றில் ஏதேனும் ஒரு ஆவணத்தை மட்டும் சமர்ப்பித்தால் போதுமானது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆகவே, கரூர் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தில் பதிவு செய்துள்ள பதிவுதாரர்கள் இதனை அறிந்து பயன்பெறும்படி கரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.சு.மலர்விழி இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கரூர்